**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF TVL. A.A. ENTERPRISES, SF.NO.609A(PART)(BIT-5), LEASE OVER AN EXTENT OF 1.54.0 HA (GOVERNMENT POROMBOKE LAND) AT NAGOJANAHALLI VILLAGE, POCHAMPALLI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 19.09.2024 AT 11.00 AM M/S. SAMUDAHAYA KOODAM, N. THATTAKKAL VILLAGE, NAGARASAMPATTI PANCHYAT, POCHAMPALLI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S. Babu | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. C. Muthuraj | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru.S.Rama Subramanian | : | The Proponent, Tvl. A.A. Enterprises |
| 5 | Thiru.S.Rajkumar | : | EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem |
| | Public | : | 60 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Tvl. A.A. Enterprises Colour Granite Quarry, lease over an extent of

1.54.0 Ha (Government Poromboke Land) at Nagojanahalli Village, Pochampalli Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 13.08.2024 and bit notices regarding public hearing was issued to the public of Thuppuganapalli Village, Tattakal Village, Nagarasampatti Village and Sentrampatti Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Revenue Divisional Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed colour granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.S.Rajkumar, EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem of the proposed Colour Granite Quarry project has made presentation about the proposed Colour Granite Quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Colour Granite Quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Aravinith, N.Tattakal Village:**

Thiru. Aravinth has said that, Instead of helping the school in the village, he asked the quarry management to upgrade the road facility in the village. He also requested to set up a speed breaker across the road which is located near the school.

**2. Thiru. Mathivaanan, N.Tattakal Village:**

Thiru. Mathivaanan has said that, establishment of this quarry will cause more harm to the public than the revenue generated from the quarry to the government. An area called Modaku, near Thattakkal village the agriculture was flourished before. But, the agriculture is currently affected by quarries. Also, the road is damaged due to high speed of the quarry heavy vehicles passing on the road which is lack of speed breaker. In our village, the groundwater level has been reduced and all the bore wells have been dried. Due to water scarcity, the agriculture has been affected heavily. Also, the nearby Tippusultan Fort, Kalabhairava Temple and surrounding forests have been affected. The drinking water in this area has high fluoride content. This is all due to the operation of already existing quarries in our village. Therefore, he object this quarry project.

**3. Thiru. Govindasamy, N.Tattakal Village:**

Thiru. Govindasamy has said that, Already, four numbers of quarries were operated in our village. The land and livestock of our village have been affected by the wastes generated from the quarries. Also, due to establishment of more number of quarries, the mountains are destroyed, thus the nature is affected. The public is affected by the dust emanated from the quarry. So, he asked the quarry management to conduct the medical camp in the village to ensure the local people's health. Also, this quarry's public hearing is seems to be an eye wash. If the youth of our town had been informed about this quarry earlier, they would have benefited by obtaining the tender of this quarry. Also, the management who has been granted with the permission should operate the quarry properly.

4. **Thiru. Kanakaraj, N.Tattakal Village:**

Thiru. Kanakaraj has said that, the village people were not properly informed about this public hearing. Also, blasting carried out in already located quarries cause cracks in nearby houses. Quarries have been extracting more minerals without adhere the government regulations. Also, due to exploitation of the hills, the rainfall decreases and the canals become dry. Also, mango trees in nearby agricultural lands are affected by dust emanated from the quarries. Due to high speed of the quarry vehicles on the road, the road is getting affected. If the permission is granted for this quarry, the public will protest against it. Due to this, law and order will be affected. Therefore, he said that permission should not be given to the project.

**The DEE, TNPCB, Hosur :**

The DEE, TNPCB, Hosur has said that, Information about this public hearing has already been communicated to the general public through a press release also he said that the information has been circulated to the District Administration and Gram Panchayat offices (BDO). Further, he said that, information has been given to the local village through loudspeakers and distribution of pamphlets in nearby villages.

5. **Thiru. Sivaguru, N.Tattakal Village:**

Thiru. Sivaguru has said that, this quarry project is against nature. Also blasting in quarry (WIRE SAW CUTTING METHOD) affects the apiculture in our village. He said that permission should not be given to the quarry as it is located near the forest area.

6. **Thiru. Muthu, N.Tattakal Village:**

Thiru. Muthu has requested that, compensation should be given to the agricultural land owners located near the quarry who will be affected by this quarry.

**7. Thiru. Anbalagan, Nagarasankottai Village:**

Thiru. Anbalagan has said that, Granites have been excavated to a depth of 100 meters beyond the permitted depth of 10 meters by the government in the existing quarry. Also, the abandoned quarry trench is full of water. Therefore, he asked the government officials to inspect the abandoned quarry. Finally, he objects the quarry project.

**8. Thiru. Ramalingam, Nagojanahalli Village:**

Thiru. Ramalingam has said that, a quarry has already been operated in this survey number. However, the quarry has been abandoned as an open pit mine without closure. The management of Suryanarayanappa Quarry has obtained permission for 2.5 acres and has operated the quarry on 10 acres. Also, they have exploited the mountains illegally. Due to this, the ground water and agriculture in the region have been affected. The District Administration did not notice this. Future generations will be affected by this quarry project. Therefore, he said that the project should not be granted.

**9. Thiru. Chakravarthy, N.Tattakal Village:**

Thiru. Chakravarthy has said that, in this public hearing meeting, the views of all the public should be considered and permission should be granted on the same. He said that, the quarry should be operated without harming the public and agricultural land, if the quarry is operated as directed, the permission may be granted.

**10. Thiru. Kumar, Vice President, Nagarsamaptti Village:**

Thiru. Kumar has said that, due to water logging in the abandoned quarry pits the water flow to the nearby lake (Arasamarathu Lake) has been obstructed. Therefore, he requested that the waterways should be cleared for the betterment of agriculture and public. He also asked the quarry management to operate the quarry without harm the public.

**11. Thiru. Prabhu, N.Tattakal Village:**

Thiru. Prabhu has said that, mining the colour granite quarry is for the luxu requirement not for a basic requirement. Due to water logging in the abandoned quarry pits the water flow to the nearby lake has been obstructed. Therefore, he requested that the waterways should be cleared for the betterment of agriculture and public. He also asked the quarry management to operate the quarry without harm the public.

**12. Thiru. Chakravarthy, N.Tattakal Village:**

Thiru. Chakravarthy has said that, Due to water logging in the abandoned quarry pits the water flow to the nearby large lake has been dried. Therefore, he requested that the waterways should be cleared for the betterment of agriculture and public. He also asked the quarry management to operate the quarry without harm the public.

**13. Thiru. Thambithurai, N.Tattakal Village:**

Thiru. Thambithurai has said that, this quarry should be operated without harm the public. He also said that, the water in the trenches of the abandoned quarry should be diverted for agricultural use.

**14. Thiru. Maathalingam, N.Tattakal Village:**

Thiru. Maathalingam has said that, I am speaking on behalf of the Tamil Nadu Agriculture Association. Earlier, such public hearings were not held for the establishment of previous quarries. At present, farmers and general public will be affected by this quarry project and also there is no benefit from this quarry. The abandoned quarries are full of water at a depth of 150 to 200 feet and are of no use to anyone. Therefore, he said that water should be diverted for agricultural use. He said that permission should be given only if the quarry is operated with good intentions without harming the public.

**15. Thiru. Gunasekaran, N.Tattakal Village:**

Thiru. Gunasekaran has said that, the quarry management has provided housing facilities in the locality.

**16. Thiru. Elizhlarasan, Nagarasampatti Village:**

Thiru. Elizhlarasan has said that, this quarry should be operated without harming the nature and also he said that, the public will benefit from the project, hence the permission may be granted for the proposed quarry.

**17. Thiru. Anbalagan, N.Tattakal Village:**

Thiru. Anbalagan has requested to make awareness to the public about public hearing meeting process.

**18. Thiru. Aravinth, N.Tattakal Village:**

Thiru. Aravinth has said that, already the abandoned quarry trenches are full of water due to excessive mining in the previous quarries. Therefore, to avoid this, he asked the government officials to inspect the quarries frequently.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 4 number of petitions were received on the proposed Tvl. A.A. Enterprises Colour Granite Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is only one written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Colour Granite Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Revenue Divisional Officer**
**Krishnagiri**

**District Collector**
**Krishnagiri**

-11-

**திருவாளர். A.A. எண்டர்ப்பிரைசஸ், சர்வே. எண். 609 A (பகுதி) (Bit –5), நாகோஜனஹள்ளி கிராமம், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட வண்ண கிரானைட் குவாரி 1.54.0 (அரசு புறம்போக்கு நிலம்) ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 19.09.2024 அன்று N.தட்டக்கல் கிராமம், நாகரசம்பட்டி பஞ்சாயத்து, போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். சமுதாய கூடம், முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.பாபு | : | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. மு. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.செ. முத்துராஜ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு S. ராம சுப்பிரமணியன் | : | உரிமையாளர்<br>திருவாளர். A.A. எண்டர்ப்பிரைசஸ் |
| 5 | திரு. S. ராஜ்குமார் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். |
| | பொதுமக்கள் | : | 60 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திருவாளர். A.A. எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி பொதுமக்கள் மற்றும் திருவாளர். A.A. எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 13.08.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், துப்புகானப்பள்ளி கிராமம், தட்டக்கல் கிராமம், நாகரசம்பட்டி கிராமம், சேன்ரம்பட்டி கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் வண்ண கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திருவாளர். A.A. எண்டர்பிரைசஸ் திட்டத்தின் உரிமையாளரை உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திருவாளர். A.A. எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. S. ராஜ்குமார், தி/ள்.ஜீயோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று வண்ண கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. அரவிந்த், N.தட்டக்கல் கிராமம்:**

திரு. அரவிந்த் அவர்கள், இப்பகுதியில் பள்ளிக்கு உதவுவதைவிட இக்கிராமத்தில் சாலையை மேம்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டார். மேலும், பள்ளியருகில் வேகத்தடை அமைத்து தருமாறு கேட்டுக் கொண்டார்.

**2. திரு. மதிவானன், N.தட்டக்கல் கிராமம்:**

திரு. மதிவானன் அவர்கள், இக்குவாரி அமைவதால் அரசுக்கு வருவாய் கிடைப்பதை காட்டிலும், பொதுமக்களுக்கு அதிகளவு தீமையே ஏற்படும். தட்டக்கல் கிராமத்திற்கு அருகில், மொடக்கு எனும் பகுதியில் முப்போகம் விளைந்து வந்தது. ஆனால், தற்பொழுது குவாரிகளினால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், குவாரியின் கனரக வாகனங்கள் சாலையில் செல்லும் பொழுது வேகத்தடையில்லாத காரணத்தினால் அதிவேகத்தில் செல்வதால் சாலையானது பாதிப்படைந்துள்ளது. இப்பகுதியில், நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்பட்டு அனைத்து கிணறுகளும் மூடப்பட்டுள்ளன. இதனால், விவசாயம் அதிகளவில் பாதிப்படைந்துள்ளது. மேலும், அருகிலுள்ள திப்புசுல்தான் கோட்டை, காலபைரவர் கோயில் மற்றும் அதை சுற்றியுள்ள காடுகள் பாதிப்படைந்துள்ளது. இப்பகுதியிலுள்ள குடிநீரில் அதிகளவு புளோரைடு கலந்துள்ளது. இதற்கு காரணம் குவாரியின் இயக்கமே ஆகும். எனவே, இக்குவாரி திட்டத்தினை நான் எதிர்ப்பதாக கூறினார்.

**3. திரு .N. கோவிந்தசாமி, N.தட்டக்கல் கிராமம்:**

திரு. கோவிந்தசாமி அவர்கள், இங்கு ஏற்கனவே, நான்கு குவாரிகள் செயல்பட்டு வந்தன. அவற்றிலிருந்து வெளியேறும் கழிவுகளால் அப்பகுதியின் நிலம், கால்நடைகள் பாதிப்படைந்துள்ளன. மேலும், குவாரிகள் அதிகளவு அமைதால் மலைகள் அழிந்து இயற்கை பாதிப்படைகிறது. குவாரியிலிருந்து வெளியேறும் தூசுகளால் பொதுமக்கள் பாதிப்படைகின்றனர். எனவே, கிராமத்தில் மருத்துவ முகாம் நடத்தி பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்று பரிசோதனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், இக்குவாரியின் கருத்துக் கேட்புகூட்டமானது கண்துடைப்பு கூட்டம் போல் உள்ளது. இக்குவாரியை குறித்து முன்னரே தெரிவிக்கப்பட்டிருப்பின் எங்கள் ஊர் இளைஞர்கள் இக்குவாரியின் டென்டரை பெற்று பலனடைந்து இருப்பார்கள். மேலும், தற்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ள நிர்வாகத்தினர், குவாரியை முறையாக இயக்க வேண்டும். இதில்

15

ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால் ஊர்பொதுமக்களுக்கு உரிய பதில் கூற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

4. **திரு . கனகராஜ், N.தட்டக்கல் கிராமம்:**

திரு. கனகராஜ் அவர்கள், இக்குவாரியின் கருத்து கேட்பு கூட்டம் குறித்து தகவல்கள் முறையாக தெரிவிக்கப்படவில்லை. மேலும், ஏற்கனவே, அமைந்துள்ள குவாரியில் வெடி வைப்பதால் அருகிலுள்ள வீடுகளில் விரிசல் ஏற்படுகிறது. குவாரிகள் அரசின் விதிமுறைகளை முறையாக பின்பற்றாமல் அதிகளவில் கனிமங்களை வெட்டியெடுத்துள்ளனர். மேலும், இவ்வாறு மலைகளை வெட்டியெடுப்பதால் மழை பொழிவு குறைந்து கால்வாய்கள் வறட்சியடைகின்றனர். மேலும், அருகிலுள்ள விவசாய நிலங்களில் மாஞ்செடிகள் குவாரிகளிலிருந்து வரும் தூசுகளால் பாதிப்படைகிறது. குவாரியின் வாகனங்கள் சாலையில் அதிக வேகத்தில் செல்வதால் சாலை பாதிப்படைகிறது. இக்குவாரிக்கு அனுமதி வழங்கினால் பொதுமக்கள் போரட்டம் நடத்துவார்கள். இதனால், சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும். எனவே, இக்குவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்க கூடாது என்று கூறினார்.

**மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்கள்:**

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்கள் இக்கருத்து கேட்பு கூட்டம் குறித்தான தகவல்கள் பத்திரிக்கை செய்தி மூலம், ஏற்கனவே, பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட நிர்வாகம் மற்றும் கிராம பஞ்சாயத்து அலுவலகங்களில் இது குறித்து அறிவுப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார். அருகிலுள்ள கிராமங்களில் ஒலிப்பெருக்கி மூலம் மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கி பொது மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

5. **திரு . சிவகுரு, N.தட்டக்கல் கிராமம்:**

திரு. சிவகுரு அவர்கள், இக்குவாரி திட்டமானது இயற்கைக்கு எதிரானது மேலும் குவாரியில் வெடிவைப்பதால் (WIRE SAW CUTTING METHOD) தேன்பூச்சி வளர்ப்பு பாதிப்படைகிறது. இக்குவாரியானது வனப்பகுதிக்கு அருகில் அமைவதால் இக்குவாரிக்கு அனுமதி வழங்க கூடாது என்று கூறினார்.

6. **திரு . முத்து, N.தட்டக்கல் கிராமம்:**

திரு. முத்து அவர்கள், இக்குவாரி வருவதினால், பாதிப்படையும் குவாரிக்கு அருகில் உள்ள விவசாய நில உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறினார்.

7. **திரு . அன்பழகன், நாகரசன் கோட்டை கிராமம்:**

திரு. அன்பழகன் அவர்கள், இங்கு ஏற்கனவே அமைந்துள்ள குவாரியில் அரசு வழங்கிய அனுமதியான 10 மீட்டர் ஆழத்தை தாண்டி 100 மீட்டர் ஆழம் வரை கற்கள்வெட்டியெடுத்துள்ளனர். மேலும், வெட்டியெடுக்கப்பட்ட அகழிகளில் தண்ணீர் நிறைந்துள்ளது. எனவே, அப்பகுதியில் அரசு அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இத்திட்டத்திற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூறினார்.

8. **திரு .ராமலிங்கம், நாகஜோனஹள்ளி கிராமம்:**

திரு. ராமலிங்கம் அவர்கள், ஏற்கனவே இந்த சர்வே எண்ணில் குவாரியானது வெட்டியெடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அக்குவாரியானது மூடப்படாமல் திறந்த வெளி சுரங்கமாக கைவிடப்பட்டுள்ளது. சூரியநாரயாணப்பா குவாரி நிர்வாகத்தினர் 2.5 ஏக்கர் அனுமதி பெற்று 10 ஏக்கர் அளவில் குவாரியை நடத்தியுள்ளனர். மேலும், சட்ட விரேதமாக மலைகளை வெட்டி எடுத்துள்ளனர். இதனால், இப்பகுதியில் நிலத்தடி நீர், விவசாயம் ஆகியவை பாதிப்படைந்துள்ளது. இதனை மாவட்ட நிர்வாகம் கவனிக்கவில்லை. இக்குவாரி திட்டம் வருவதால் எதிர்கால சந்ததியினர்

பாதிப்படைவார். எனவே, இத்திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று கூறினார்.

9. **திரு . சக்கரவர்த்தி, N.தட்டக்கல் கிராமம்:**

திரு. சக்கரவர்த்தி அவர்கள் இக்கருத்து கேட்புக் கூட்டத்தில் அனைத்து பொதுமக்களின் கருத்துகளை கேட்டறிந்து அனுமதி வழங்க வேண்டும். இக்குவாரியால் பொதுமக்கள், விவசாய நிலம் ஆகியவை பாதிப்படையாமல் குவாரியை இயக்க வேண்டும் என்று கூறினார். அவ்வாறு இயக்கும் பட்சத்தில், குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

10. **திரு . குமார், நாகரசம்பட்டி பேரூராட்சி துணை தலைவர்:**

திரு.குமார் அவர்கள் இப்பகுதியில் ஏற்கனவே வெட்டி எடுக்கப்பட்ட குழிகளில் தண்ணீர் தேங்கியிருப்பதால் அருகிலுள்ள அரசு மரத்து ஏரியில் தண்ணீர் வரத்து குறைந்துள்ளது. எனவே, நீர்வழி தடத்தை ஒழுங்குப்படுத்தி விவசாயம் மற்றும் பொதுமக்களுக்கு உதவி செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மேலும், குவாரியை பாதிப்பின்றி குவாரியை இயக்குமாறு கேட்டுக் கொண்டார்.

11. **திரு . பிரபு, N.தட்டக்கல் கிராமம்:**

திரு.பிரபு அவர்கள், வண்ணக்கல் குவாரியானது ஆடம்பரம் அது அடிப்படையல்ல. ஏற்கனவே வெட்டி எடுக்கப்பட்ட குழிகளில் தண்ணீர் தேங்கியிருப்பதால் அருகிலுள்ள அரசு மரத்து ஏரியில் தண்ணீர் வரத்து குறைந்துள்ளது. எனவே, நீர்வழி தடத்தை ஒழுங்குப்படுத்தி விவசாயம் மற்றும் பொதுமக்களுக்கு உதவி செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மேலும், குவாரியை பாதிப்பின்றி குவாரியை இயக்குமாறு கேட்டுக் கொண்டார்.

12. **திரு . சக்கரவர்த்தி, N.தட்டக்கல் கிராமம்:**

திரு.சக்கரவர்த்தி அவர்கள், இப்பகுதியிலுள்ள பெரிய ஏரியானது, ஏற்கனவே வெட்டி எடுக்கப்பட்ட குவாரி குழிகளில் தண்ணீர் தேங்கியிருப்பதால் தண்ணீர் வரத்து இல்லாமல் வறண்டுள்ளது. எனவே, நீர்வழி தடத்தை ஒழுங்குப்படுத்தி விவசாயம் மற்றும் பொதுமக்களுக்கு உதவி செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மேலும், குவாரியை பாதிப்பின்றி குவாரியை இயக்குமாறு கேட்டுக் கொண்டார்.

13. **திரு . தம்பிதுரை, நாகரசம்பட்டி பேரூராட்சி தலைவர்:**

திரு.தம்பிதுரை அவர்கள், இக்குவாரியை பாதிப்பின்றி இயக்க வேண்டும். ஏற்கனவே, அமைந்துள்ள குவாரியின் அகழிகளில் நிறைந்துள்ள நீரினை விவசாய பயன்பாட்டிற்கு ஏதுவாக மடை மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறினார்.

14. **திரு . மாதலிங்கம், N.தட்டக்கல் கிராமம்:**

திரு. மாதலிங்கம் அவர்கள், நான் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் சார்பாக கருத்துகளை கூறுகிறேன். முன்னர், குவாரிகள் அமைக்கும் பொழுது இவ்வாறு கருத்துக் கேட்பு கூட்டங்கள் நடத்தப்படவில்லை. தற்பொழுது, அமையும் குவாரியினால் உள்ளூரில் விவசாயிகள் பொது மக்கள் ஆகியோர் பாதிப்படைவார்கள். எனவே, இக்குவாரியால் நன்மை ஏதும் இல்லை. ஏற்கனவே, அமைந்துள்ள குவாரிகளில் 150 முதல் 200 அடி ஆழத்தில் நீர் நிறைந்துள்ளது, அதனால் யாருக்கும் பயனில்லை. எனவே, நீரினை விவசாய பயன்பாட்டிற்கு ஏதுவாக மடை மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறினார். இக்குவாரியை பொது மக்கள் பாதிப்பின்றி நல்ல நோக்கத்துடன் நடத்தினால் மட்டுமே அனுமதி வழங்க வேண்டும் என்று கூறினார்.

**15. திரு .குணசேகரன், N.தட்டக்கல் கிராமம்:**

திரு. குணசேகரன்,அவர்கள் இக்குவாரி நிர்வாகத்தின் உள்ளூரில் வீடு வசதி செய்து தந்துள்ளனர் என்று கூறினார்.

**16. திரு . எழிலரசன், நாகரசம்பட்டி கிராமம்:**

திரு. எழிலரசன் அவர்கள், இக்குவாரியை இயற்கைக்கு பாதிப்பின்றி இயக்க வேண்டும் என்றும், பொது மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவதால் குவாரியை துவங்குவதற்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்.

**17. திரு . அன்பழகன், N.தட்டக்கல் கிராமம்:**

திரு. அன்பழகன் அவர்கள், பொது மக்களுக்கு கருத்துக் கேட்பு கூட்டம் என்னவென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**18. திரு . அரவிந்த், N.தட்டக்கல் கிராமம்:**

திரு. அரவிந்த் அவர்கள், ஏற்கனவே, அமைந்துள்ள குவாரிகளில் அளவுக்கு மீறி கற்களை வெட்டியுள்ளதால் தற்பொழுது அகழிகளில் தண்ணீர் நிறைந்துள்ளது. எனவே, இதனை தவிர்க்க அரசு அதிகாரிகள் அடிக்கடி குவாரிகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திருவாளர். A.A. எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 4 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருவாளர். A.A. எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 1 எண்ணிக்கையிலான மனுவானது, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் பெறப்பட்டது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் | வருவாய் கோட்டாட்சியர், | மாவட்ட ஆட்சியர் |
|---|---|---|
| தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| ஓசூர் | | |